செய்தி வெளியீடு எண். 160 நாள்: 27.03.2020

**கொரானா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ்ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், கொரானா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (27.03.2020) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாகளிடம் கூறியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணை மற்றும் அறிவுறுத்தல்களுக்கிணங்க திருவள்ளூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் துரிதமாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி மாவட்ட நிர்வாகம் சார்பாக மக்களுக்கு முழவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 13 மாநில எல்லைகள் மற்றும் 15 மாவட்ட எல்லைகள் ஆகிய இடங்கள் மூடிவைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. வெளி மாநில மக்கள் உள்நுழையாமலும், மாவட்டத்தில் உள்ள மக்கள் வெளியில் செல்லாமலும் கண்காணிப்படுகின்றனர்.

மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக போதிய கிருமி நாசினிகளும், தடுப்பு உபகரணங்களும் போதுமான அளவு இருப்பில் உள்ளது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஆகியவற்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக 580 படுக்கைகளும் 46 வெண்டிலேட்டர்களும், தயார் நிலையில் உள்ளது. மாவட்டத்தில் முதற்க்கட்டமாக 235 நபர்கள் கண்டறியப்பட்டு 64 நபர்கள் 28 நாட்கள் தனிமைபடுத்தப்பட்ட பின் வீடு சென்றுள்ளனர். 171 நபர்கள் 28 நாட்கள் தனிமைபடுத்தப்பட்டனர். இரண்டாம் கட்டமாக. 1580 தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீடுகளில் தனிமைபடுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு அறிவிப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு வருகின்றது. திருவள்ளூர் மற்றும் ஆவடி பகுதிகளில் 67 நபர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு போதிய அத்தியாவசிய அடிப்படைகள் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 144 தடை உத்தரவை மீறியதாக 450 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2 நபர்கள் மீது சமூகவளைதளத்தில் வதந்திபரப்பியதால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

www.StopCoronaTiruvallur.com என்ற இணையதளம் வாயிலாக கொடையாளர்கள் பொருட்களை தானமாக வழங்கலாம், அத்தியவசிய பொருட்கள் தேவைபடுபவர்களும் இந்த இணையதளத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

கொரானா வைரஸ் தொடர்பான தகவல்களை திரட்டி உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரகத்தில் முழு நேரக் கட்டுப்பாட்டு அறை (24X7) ஏற்படுத்தப்பட்டு, பணியாளர்கள் முழு நேரமும் பணியாற்றி வருகின்றார்கள். இக்கட்டுப்பாட்டு அறையில் சுகாதாரத் துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். பொது மக்கள் தேவையின்றி வெளியில் செல்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். வீட்டிலேயே தனிமைபடுத்திக்கொண்டு அனைவரும் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ள முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

**முக்கியமாக வெளிநாடுகளிலோ அல்லது வெளிமாநிலங்களில் இருந்து வருகைபுரிந்தவர்கள் உள்ளூர் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு அறை 04427664177, 04427666746 9444317862 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும். இதனால் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினரும் நோய் பரவுதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.** இவ்வாறு மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாகளிடம் கூறினார்.

பின்னர் திருவள்ளுர் அரசு தலைமை மருத்துவமனையில், கொரானா வைரஸ் தடுப்பு சிறப்பு சிகிச்சை பிரிவில் மேற்க்கெள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வுக் மேற்க்கொண்டு,

இந்நிகழ்ச்சிகளில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பரலாமன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்சாண்டர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.அரவிந்தன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வெ.முத்துசாமி, திட்ட இயக்குநர்கள் திருமதி.க.லோகநாயகி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை), திரு.வை.ஜெயக்குமார், அரசு மருத்துவமனை (ம) அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரசி ஸ்ரீவத்சவ், இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு.இளங்கோவன், பூவிருந்தவல்லி சுகாதார மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெ.பிரபாகரன், திருவள்ளுர் சுகாதார மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மருஜவஹர்லால், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பல்வேறு துறை உயர் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**